பாதுகாவலன்
PATHUKAVALAN

மலர்: 119 02—07—1993
இதழ்: 13 விலை ரூபா 5-00

மாநகராட்சி மன்ற நூலகம் 06-7-1993 யாழ்ப்பாணம்

## நெஞ்சார்ந்த நல் வாழ்த்துக்கள்

யாழ் ஆயர் பேரருள்திரு E. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் தம் பெயர்கொண்ட புனித தோமையார் திருவிழாவைக் கொண்டாடும் சுபதினமாகிய 03-07-1993 சனிக்கிழமை அன்று, எங்கள் அன்புள்ள ஆயர் அவர்களை நெஞ்சார வாழ்த்தி, அவர் தம் சேவை மென்மேலும் சிறந்தோங்க இறையருளை இரந்து நிற்கிறோம்.



✻ கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண் ✻

### திருமறைக் கலாமன்ற இலக்கிய விழாவில்

# "தமிழ் பல மதங்களுக்கும் உரியது"

★ மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை

**" தமிழ் ஒரு மதத்திற்குரியதல்ல, பல மதங்களுக்கும் உரியது. பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் சமுதாய மேம்பாட்டிற்கான பல தரப்பட்ட அரிய பணிகளை ஆற்றி, குறிப்பாக கிறிஸ்தவ தமிழ் இலக்கியம், கலை நூல்களைப் பற்றி கட்டுரைகள் எழுதி, ஆய்வுரைகள் ஆற்றி தமிழுக்கும் சமயத்திற்கும் பெரும் தொண்டாற்றுவதை நான் பாராட்டு கிறேன். அப் பெரியாரைக் கௌரவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்."**

திருமறைக் கலாமன்றம் 1993 யூன் திங்கள் 25, 26, 27ம் நாட்களில் எடுத்த இலக்கிய விழாவின் மூன்றாம் நாள் சிறப்பு நிகழ்ச்சியான பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின் இலக்கியப் பணியைப் பாராட்டி, பொன்னாடை போர்த்திக் கௌரவித்த வைபவத்தின்போது ஆசியுரை ஆற்றிய ஒய்வு பெறும் யாழ். ஆயர் மேதகு வ. தியோகுப் பிள்ளை ஆண்டகை மேற் கண்டவாறு கூறினார்.

"தமிழ் இலக்கிய வானில் பல்லாண்டு காலமாக ஒளி ஊட்டும், வழி காட்டும் ஒப் பற்ற அறிவுச் சுடர் பேராசிரியர் கா. சிவத்தம்பி" என்று இந்நிகழ்வில் பாராட்டுரை வழங்கிய மன்ற இயக்குநர் பேராசிரியர் நீ. மரிய சேவியர் அடிகளார் எடுத்துரைத்தார். பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் பேரறிஞர்கள் கைலாசபதி- வித்தியானந்தன் மரபில் நின்று, தமிழ் வளர்த்து, தமிழ் அறிவுக் கலை வளர்த்து, ஆய்வு இலக்கணம் வகுத்து, அரிய இலக்கியங்கள் படைத்து, தமிழ் கூறும் நல் உலகிற்கு தமிழ் ஆசானாய், ஆய்வாளனாய், விமர்சகனாய், நடமாடும் கலைக் களஞ்சியமாய், சொல்லேர் உழுவனாய், சோர் வில்லாச் சிந்தனையாளனாய் சேவைகள் பல புரிந்துள்ளார். மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள் கூறாது, திறமான தமிழ்நெறியை உலகில் திக்கெட்டும் எடுத்தியம்பும் காமான புலவன் இவர் என்றும் மேலும் பாராட்டினார் அடிகளார்.

''வட பகுதி மக்களின் இன் னல்களை உலகறிய எடுத்துக் கூறி எமது இக்கால சரித்திரத் தில் ஒரு முக்கிய இடம் வகிப்ப வராகிய மேதகு வ. தியோகுப் பிள்ளை ஆண்டகையின் கையினால் பொன்னாடை போர்த்தப்பட்டதைஒருபெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்'' என்று பேராசிரியர் சிவத்தம்பி நன்றி கூறினார்.

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## சிரமங்கள் மத்தியில் சிறப்புடன் செயலாற்றிய சேவைச் செம்மல்



யாழ் மறைவட்ட மனித முன்னேற்ற நடு நிலையத்தில் 1983 ஆம் ஆண்டு முதல் இயக் குநராக பணியாற்றி கிளி-முல் லை மாவட்டங்களின் குரு முதல்வராகவும் (Vicar For- ane) அம் மாவட்டங்களில் அமைக்கப்படவிருக்கும் மேய்ப் புப் பணியக(Pastoral Centre) நிர்வாகியாகவும் பொறுப் பேற்க செல்லும் அருட் திரு ம. இ. பயஸ் அடிகளாரின் சேவை நலம் பாராட்டு விழா 16-06-93 புதன் கிழமை மாலை 4. 00 மணிக்கு நிலைய நூலகத்தில் நிலைய நிர்வாக செயலர் அருட் செல்வி கஸ் மீர் தலைமையில் ஒரு நிமிட மௌன அஞ்சலியுடனும் இறை வணக்கத்துடனும் ஆரம்பமாகியது. முன்னாள்

யாழ் ஆயர் பேரருட் திரு வ.தியோயாகுப்பிள்ளை ஆண் டகை அவர்களும், தற்போ தைய யாழ் ஆயர் பேரருட் திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்த னர்.

விழாவுக்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்று திரு. யஸ்ரின் பெர்ணாண்டோ வரவேற்புரை நிகழ்த்தினார். தலைமையுரையை அடுத்து யாழ் இளங் கலைஞர் மன்றத் தலைவர் இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கம் அவர்கள் பாமாலைகளால் பூ மாலை சூடி இயக்குநரின் சேவைகளை வாழ்த்திப் பாடி னார். இயக்குநரின் பத்தாண்டு சேவைகள் ஆய்வு செய்யப் பட்டு திரு ஞா. அருளானந்தம் அவர்களால் எடுத்துக் கூறப் பட்டது. (6ஆம் பக். பார்க்க)

ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் தனது உரையில் "1983 ஆம் ஆண்டு அருட் திரு பயஸ் அடிகளாரை நான் மனித முன்னேற்ற நிலையத்திற்கு நியமித்த போது அந்நிலையத்திற்கென தனியாக கட்டிடங்களோ

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## இலக்கியத்திற்கு தமிழ் நெறி ஊன்றுகோலாகவேண்டும்

● பேராசிரியர் மரிய சேவியர் அடிகளார்

நடப்பாண்டில் திருமறைக் கலாமன்றம், நாட்டுக்கூத்து, தமிழ் இசை, தமிழ் இலக்கியம் எனும் கலைகளுக்கு விழா எடுத்து, அதன் வழியாக இறைபணி புரிந்து வருகிற தென, இலக்கிய விழாவின் மூன்றாம் நாள் (27-6-93) நிகழ்ச்சிகளுக்கு வருகை தந்த பெருந்திரளான இரசிகப் பெரு மக்களை வரவேற்று உரை யாற்றிய மன்றப் பொதுச் செயலர் V. J. கொன்ஸ்ரன் ரைன் கூறினார்.

இசைத் தென்றல் திரு. M.யேசுதாஸ்இசைத்த தமிழ்த் தாய் வாழ்த்துடன் ஆரம்ப மான 'கவியின்பம்' எனும் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங் கிய மன்ற இயக்குநர் பேரா சிரியர் நீ. மரியசேவியர் அடிக ளார், கலை வளர, தமிழ் வளர, அறம் வளர, இறை அருள் பெருக, இறை நம்பிக் கையுடன் திருமறைக் கலாமன் றம் மக்களுக்குப் பணிபுரிகிற தென்பதை தனது தலைமை யுரையில் வலியுறுத்தினார்.

மானிட உணர்வும், வாழ்க்கை அனுபவமும், கலையினதும், இலக்கியக்கியத்தினதும் ஊற் றாயிருக்கின்றவெனவும், நுண் உணர்வுடன்போராடிக்கொண் டிருக்கும் கலைஞர் படைக்கும் இலக்கியம் தமிழ் நெறியை யும், தவறாத ஒழுக்கத்தை யும் பிரதிபலிக்கிறதெனவும் அவர் மேலும் கூறினார்.

தன்னை வழிநடத்திய மூன்று யாழ். ஆயர்களின் ஒத் தாசையை மனமாரப் பாராட் டிய மரியசேவியர் அடிகளார், இக் கலைக் குடும்பத்தின் பணி யாளர்களின் மனப்பக்குவம், தியாக சிந்தை, கூட்டுமுயற்சி, குரு—சீட மரபோடு விளங்கும் கட்டுப் பாடு, நவீனத்தைத் திறம்படக் கொடுக்கும் உய ரிய நோக்கு, இலட்சியப் பாதையில் உறுதியான நம் பிக்கை முதலிய உயர்ந்த சிறந்த பண்புகள் இம் மன்றத் தின் வெற்றிக்கு வழிகோலு கின்றனவெனவும் கூறினார்.

தலைமை உரையைத் தொடர்ந்து, கவியரங்கு இடம் பெற்றது. திரு. அரியரத்தினம் ('வாகரை வாணன்') திரு. சோ. பத்மநாதன், கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை முறையே 'நெஞ்சு பொறுக்கு தில்லையே,' 'வடக்கிருத்தல்,' ' என்று தணியும்,' எனும் தலைப்புகளில் கவிபாட, அவையினர் எல்லோரும் கவி யின்பக் கடலில் மூழ்கினர்.

திருமறைக் கலாமன்றக் கவின் கலைப் பயிலகம்அளித்த வரவேற்பு நடனமும், திரு. C. M. நெல்சன் நிகழ்த்திய நன்றியுரையின் பின் மேடை யேற்றிய 'இலங்கையர்கோன் விலங்கு' எனும் நடன நாடக மும் அந்நாள் "கவியும் கருத் தும்'' எனும் விருந்துக்கு மனம் குளிரும் கலை அமுதுகளாக அமைந்துள்ளன.

கருத்தரங்கு

## "தமிழிலக்கியத்தில் சமரசம்"

திருமறைக் கலாமன்றத்தில் 27-6-93 அன்று நடைபெற்ற "தமிழிலக்கியத்தில் சமரசம்'' எனும் விடயம் பற்றிய கருத் தரங்குக்குத் தலைமை தாங் கிய பேராசிரியர் சிவத்தம்பி. இதில் பங்குபற்றி சிறப்புரை ஆற்றிய கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி A.J.V. சந்திரகாந்தன் அடிகளாரை, "பாரபட்சமில் லாமல், விரிந்தநோக்குடன் செயலாற்றும் சிறந்த எதிர் காலம் கொண்ட அறிவாளன்'' என்று அறிமுகம் செய்தார். தமிழ் எல்லா மதத்தையும் உள்வாங்கி, உலக நோக்கு, மானிடப்போக்குடன் பொருளி யல், மறையியல், அறிவியல் போன்ற பல்வேறு துறைகளை உள்ளடக்கி இலக்கியம் படைத் தது — என்று சந்திரகாந்தன் அடிகளார் தன் கருத்துச் செறிந்த உரையில் விளக்கி னார்.

பேராசிரியர் சிவத்தம்பி ஆற் றிய நயவுரையில் அவர் கூறிய தாவது: தமிழர்களென்று பலரையும் இணைத்து வைக் கின்ற கூறுகள் பண்பாடும் மத நம்பிக்கைகளுமாகும்.

மத ஒற்றுமையின் சின்னம் தமிழரின் சமூக உறவுமுறை, மொழி மூலம் வரும் பண்பாடு என்பதில் தங்கியிருக்கிறது. அரசனை, ஆண்டவனை மைய மாகக் கொண்ட தமிழ் இலக்கி யங்கள் எல்லாவற்றையும் உள் வாங்கும் தன்மையுடையன. சகலவிதமான அபிப்பிராயங் கள், கருத்துவேறுபாடுகளுக் கும் அவை இடம் அளிக்கின் றன. செழுமையான தமிழ் மொழி பக்தியின் மொழியாய் சிறப்பாய் திகழ்கின்றது.

## ஆதரவற்ற சிறுவர் பராமரிப்பு நிலையம்

ஆதரவற்றவர்களுக்கான "பூங்கா'' நிலையம் கோப் பாய், இருபாலையில் (கோண் டாவில் வீதி) இயக்குநர் அருட் திரு இ.ம.பயஸ் அடிகளாரால் 28 – 06 – 93 திங்கட் கிழமை திறந்து வைக்கப் பட்டது.

சம கால நிகழ்வுகளால் தந்தை அல்லது தாயை இழந் தோர் இந் நிலையத்தால் பரா மரிக்கப்பட தமது பகுதியில் உள்ள கத்தோலிக்க குருமார் ஊடாக தங்கள் விண்ணப்பங் களை அனுப்பலாம் என இயக் குநர் அறியத் தருகின்றார்.

## எம்கருத்து

# சக்தியற்ற இன்றைய சமுதாயம்

இன்றைய சமுதாயத்தில் பல ஏற்றத் தாழ்வுகளைக் காண்கின்றோம். மனிதன் தன்மீது அதிருப்தி கொண்டுள்ளான். அறிவில் எவ்வளவு வளர்ச்சியடைந்திருந்தாலும் தன் தனிவாழ்வில் ஒரு வெறுமையைக் காண்கின்றான்.

சமுதாயத்தில் எவ்வளவோ பிளவுகள், ஊழல்கள், அநீதி, பற்றாக்குறை, பட்டினி, உரிமை மறுக்கப்படுதல், மனிதனின் மாண்புக்கு இழுக்கான செயல்கள் நாளுக்குநாள் பெருகிக்கொண்டே வருகின்றன.

ஒரு சிலரிடம் அளவுக்கதிகமான செல்வம், செல்வாக்கு, அதிகாரக் குவியல். பலரிடம் வறுமை, போதிய உணவு, உடை, உறைவிடம் போன்ற அத்தியாவசிய அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்ய இயலாமை.

மனிதன் ஒரு சில வேளைகளில் மிருகத்தைவிட இழிவான நிலையில் வாழ்கிறான். தன் மானத்தை இழந்து, அடிமையாய் அடிபட்டு, அடைபட்டு அவல நிலையில் வாழ்கிறான். பொருளாதார, சமூக வாழ்வு மட்டுமல்ல அவனுடைய ஒழுக்க வாழ்வு, மதவாழ்வு முதலாய் அவல நிலையில் இருக்கின்றன.

இவ்வாறு சமுதாயம் சீர்கெட்டு, நோயுற்று மெலிந்து கிடப்பதற்குக் காரணம் என்ன?

சமுதாயத்தின் உயிரோட்டமாக, பிணைப்புக் கயிறாக, சமுதாயத்தின் ஆக்க சக்தியாக விளங்க வேண்டிய இறைவனை மனிதன் மறந்து, புறக்கணித்து வாழ்வதே மூல காரணமாகும்.

ஒவ்வொரு மனிதனும் ஒரு சிறு உலகம் என்று கிரேக்க மேதை கூறினார் (*Man is a micro-cosmos*). ஆகவே மனிதன் ஒரு மறைபொருளாகவே இருந்து வருகிறான். அவன் உள் மனதைப் புரிந்து கொள்வது கடினம். ஒரு கூட்டுப் புழுவைப்போல, ஓட்டுக்குள் இருக்கும் நத்தையைப்போல, ஆமையைப்போல மறைந்து வாழ்கிறான்.

இவ்வாறு தன்னைச் சுற்றி சுவர் அமைத்துக் கொண்டு, தனித்து வாழும் மனிதன் தன் கூட்டை உடைத்துக் கொண்டு திறந்த உள்ளத்தோடு, பரந்த நோக்கத்தோடு வெளியே வரவேண்டும். தன்னலத்திற்கும், தன்னிச்சைக்கும் அப்பாற்பட்ட ஒரு குறிக்கோளைத் தனக்கென அமைத்து அதை அடைய ஆவன செய்யவேண்டும்.

அவ்வாறு தனக்கென ஒரு இலக்கை அமைக்கின்ற மனிதன் தனக்கு முன்மாதிரியாக நிறைவாழ்வைத்தர வந்த இறை மகன் கிறிஸ்துவை தெரிந்துகொள்ள வேண்டும்; ஏற்றுக்கொள்ள வேண்டும். மனித வாழ்வின் பொருளை நாம் கிறிஸ்துவிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஏனெனில் கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்ட நாம் கிறிஸ்துவின் மூலம் தான் வாழ்க்கையின் புதிய கண்ணோட்டத்தைப் பெறுகிறோம்.

> "உள்ளத்தின் ஆழத்தில் உங்களைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள். உண்மையால் ஏற்படும் நீதியிலும், புனிதத்திலும் கடவுள் சாயலாகப் படைக்கப்பட்ட புதிய இயல்பை அணிந்து கொள்ளுங்கள்."
> (எபேசி. 4 : 24)

கிறிஸ்து இயேசு மக்களுடைய ஆன்ம சரீர தேவைகளை முழுமையாக நிரப்புகிறார். தன்னைத் தேடி வந்த மக்களுடைய பசியை நீக்கினார். அறியாமையைத் தம் போதனையாலும், சாதனையாலும் அகற்றினார். பாதுகாப்பைத் தந்தார். இளைப்பாற்றியைத் தந்தார். பாவத்தைப்போக்கி, உள்ள அமைதியைத் தந்தார். மனிதனை மனிதனாக வாழவைத்தார்.

அதே கிறிஸ்து இன்றும் அப்பணிகளை ஆற்றி வருகிறார். ஆன்மாவும் உடலும் கொண்ட மனிதன் தன் நிறைவை கிறிஸ்துவில் அன்றி வேறெங்கும் கண்டடைய முடியாது.

ஆகவே கிறிஸ்துவை ஒரு முன்மாதிரிகையாக மட்டுமன்றி அவரையே வாழ்வாகக் கொள்ளவேண்டும். அப்படி கிறிஸ்துவின் ஆவியால் வழிநடத்தப்படுவது மனிதனுடைய வாழ்வை அர்த்தமுள்ளதாக்குகிறது, குறிக்கோளுடையதாக்குகிறது, உயர்த்துகிறது, நிறைவுபடுத்துகிறது.

## திருமறை அறிவை வளர்ப்போம்

# கிறிஸ்தவ கோட்பாடுகள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

(4) படைப்பின் மறைபொருள்

1. எல்லாப் படைப்புகளுக்கும் மூலகாரணமாயிருப்பவர் கடவுள். ஆயினும் படைக்கப்பட்ட பொருள்கள் பல்வேறு மட்டங்களில் ஏறுவரிசையில் உயர்ந்து செல்லுகின்றன. சடப்பொருள்களின் மூலக்கூறுகள், உறுப்பமைதிவாய்ந்த உயிர்ப் பொருள்கள், இறுதியில் ஆன்மீக வாழ்வுள்ள உயிர்கள் - அதாவது மனிதனும், படைப்பின் அதியுயர்ந்த நிலையிலுள்ள தேவதூதர் என்றழைக்கப்படும் அறிவுவாய்ந்த ஆவியுருக்களும்–இதுவே அப்படிநிலை. உள்ளவை எல்லாம் படைக்கப்பட்டனவே. தமது பூரணத்துவத்தையும் அன்பையும் பகிர்ந்து கொள்வதற்காகவே இறைவன் படைப்புக்களை உண்டாக்கினார். வேதாகமத்தின் முதற்பகுதியிலே பிரபஞ்சத்தினதும், மனிதனதும், அனைத்துப் பொருள்களினதும் தோற்றுவாய்பற்றி எளிமையாக ஆனால் ஆழமான மொழிநடையில் எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

படைப்பு என்பது கடவுளின் ஆன்மீக பூரணத்துவநிலையிலிருந்து பொருள்களைப் பிறப்பிக்கும் தெய்வீக செயற்பாடாகும். இந்த வியத்தகு வல்லமையை "இறைவன் தம் வார்த்தையினால் படைத்தார்" என்று வேதாகமம் கூறுகிறது. "இறைவன் தாம் படைத்த எல்லாவற்றையும் நோக்கினார். அவை எல்லாமே மிகவும் நன்றாய் இருந்தன என்று கண்டார்" (ஆதி. 1,31) எனவும் அது கூறுகின்றது. அதாவது கடவுள் படைத்தவையெல்லாம் தம்மில்தாமே நன்மையானவை என்பதாகும். பிரபஞ்சமும் மனித இனமும் எவ்வாறு உருவாயின என்பதைப்பற்றி திருவெளிப்பாட்டில் ஒன்றும் கூறப்படவில்லை. பரிணாமம் என்னும் இன்றைய விஞ்ஞான கொள்கையுடன் நேரடியாகத் தொடர்புடைய ஒன்றும் அதிற் கூறப்படவில்லை. ஆயினும் உலகபடைப்புகளுக்கெல்லாம் மனிதனே சிகரமானவன் என்ற திருவெளிப்பாட்டின் கருத்துக்கு இந்தக் கொள்கை முற்றும் ஒத்ததே.

2. கடவுள் எல்லையற்ற விதத்தில் உலகுக்கும் மனிதனுக்கும் மேம்பட்டிருக்கிறார், எல்லையற்றவிதத்தில் வேறுபட்டிருக்கிறார். ஆனால், அவர் மனிதனுக்கு அந்நியரல்லர்; மாறாக, அவர் சகல உயிர்களுக்கும் பிரசன்னமாயிருக்கிறார்; அவை அழியாது பாதுகாத்து, அவை விருத்தியடையுமாறு தூண்டுதலளிக்கிறார். மிக நெருங்கிய விதத்தில் மனிதனோடிருக்கிறார். படைப்புகள் அனைத்தும் இறைவனது ஞானத்தையும், மகத்துவத்தையும் பிரதிபலிக்கின்றன. விசேடமாக மனிதன் அவற்றைப் பிரதிபலிக்கிறான். சங்கீத ஆசிரியர் பின்வருமாறு தமது கவிதையிற் பாடுகிறார் "ஆண்டவரே, எம் ஆண்டவரே உமது பெயர் உலகெங்கும் எவ்வளவு வியப்புக்குரியது. உம்முடைய வானங்களை, உம் படைப்புகளை, நீர் அமைத்த நிலவை விண்மீன்களைக் காணும் போது மனிதனை நீர் ஒரு பொருட்டாக நினைக்க அவன் யார்? அவனைப்பற்றி அக்கறைகொள்ள அவன் யார்? வானதூதரை விட அவனைச் சிறிது தாழ்ந்தவனாகப் படைத்தீர். மாண்பையும் பெருமையையும் அவனுக்கு முடியாகச் சூட்டினீர். உம் படைப்புகள் அனைத்தின் மீதும் அவனுக்கு அதிகாரம் தந்தீர்; அனைத்தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தினீர்". (சங். 8:1,3–6)

(வளரும்)

# அன்னை திரேசாவின் இதயக் குரல்

★ இளைஞர்களே நீங்கள் தயாரா?

● அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ்?

**அன்பார்ந்த இளைஞர்களே!**

நீங்கள் அன்புடையவர்களாக இருந்தால் மகிழ்ச்சியுடைவர்களாக இருப்பீர்கள். அன்புள்ளத்திற்குத் தான் உண்மையான இன்பம் உற்ற நண்பனாக இருக்கமுடியும்.

அன்பே செபம், அன்பே வலிமை, அன்பே ஆன்மாக்களைப் பிடிக்கும் வலை. இளைஞர்களுக்கும் வறியவர்களுக்கும், வருந்துபவர்களுக்கும் அன்பை வழங்க வாருங்கள்.

*நீங்கள் அதற்குத் தயாராக இருக்கிறீர்களா?*

இறையன்புக்கு உரியவர்களாக, இறைவனுக்குச் சாட்சி பகருபவர்களாக விளங்குங்கள். உங்கள் முகத்தில் புன்னகை, உங்கள் கண்களில் கருணை, உங்கள் செயல்களில் அன்பு விளங்கட்டும். இறைவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

# *மரபுகளும் மாற்றங்களும்*

— என். சண்முகலிங்கன்

## 7. முதுமை

7.1. முதுமையடைதல், உலகப் பொதுவான ஒரு பருவமாறுதல், எனினும் உலகப் பண்பாடுகள் இப்பருவத்தினை எவ்வாறு நோக்குகின்றன என்பதனைப் பொறுத்து, முதுமை வேறுபட்ட அனுபவங்களைக் காணும்.

முதியவர் ஒருவர் இறக்கின்ற போது ஒரு பெரும் நூலகமே எரிகின்றது என்பது ஆபிரிக்க பழமொழி; இது அந்த பண்பாடு முதுமைக்கு தந்த மதிப்பினை காட்டும்.

7.2. எங்கள் பண்பாட்டின் நிலை என்ன? வீதிகளில், வீடுகளில் இன்று அதிகமதிகமாக கேட்கப்படும் 'பழசு', 'நையின்ரி' போன்ற புதிய கலைச் சொற்களை எங்கள் பண்பாட்டில் முதுமைபற்றிய மனப்பாங்கின் பிரதிபலிப்புகளாக கொள்ளலாமா?

அதிகரித்துவரும் முதியோர் பராமரிப்பு இல்ல தேடல்களும், அகதிவாழ்வில் அதிக பாதிப்புக்குள்ளாகும் நிலைமைகளும், இந்த பாதிப்புகளின் அடியாக அதிகரிக்கும் முதியோர் உளநோய் பற்றிய தரவுகளும் அதிக ஆராய்ச்சியின்றி முதுமை இங்கும் புறக்கணிக்கப்படுதலை நிறுவும்.

7.3. முதுமை யடைந்தமைக்காக ஒதுக்குதலும், அடக்குதலும் பாரபட்சம் காட்டுதலும் ஏனைய சமூக அநீதிகளை ஒத்தனவே என்ற உணர்வு இன்று மேலை உலகில் கிறே பவர் (Cray Power) இயக்கங்களையும் தோற்றுவிக்கும். இங்கு பெஞ்சனியர் சங்கங்களுக்கு அப்பால் போக சக்தியில்லை.

7.4. முதுமையை பேணுவதென்பது, பழமை பேண்வாதமாக வேண்டியதில்லை; முதியவரை 'பழசு' என்று தள்ளும் 'இளசுகள்' எல்லோரும் முற்போக்கு வாதிகள் என்றுமில்லை.

பெற்றவரை தெய்வமாக காணும் ஒரு பண்பாட்டின் எச்சங்கள், அவர்களை அநாதைகளாக்கி நிற்கும் நிலை மனிதமல்ல; அதுபோலவே அனுபவ ஞானம் கொண்டவரை, வயதின் அடிப்படையில் சமூகத்திலிருந்து தள்ளுதல் முன்னேற்ற வழியுமல்ல.

### திருக்குடும்பக் கன்னியருடன்

# 200 ஆண்டை நோக்கி

*1793ஆம் ஆண்டு ஐப்பசித்திங்கள் 27ஆம் நாள் திருக்குடும்ப சபையின் வரலாற்றில் ஒரு பொன்னாள். எங்கள் திருக்குடும்ப சபை ஸ்தாபகரான வணக்கத்துக்குரிய பீற்றர் பியன்வெனு நோஆய் அடிகள் பிறந்த பெருநாள். இவரது 200 வது பிறந்த தினத்தை நினைவுகூருகின்ற நாம், அவரை வாசக நேயர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கும் முகமாக, '200 ஆம் ஆண்டை நோக்கி' என்னும் தொடர் கட்டுரையை வெளியிடுகின்றோம்.*

பியன்வெனு – போர்டோவில் 1793 ஐப்பசி27 இல் நோஆய் குடும்பத்தில் ஒரு மைந்தன்.

''எமக்கொரு மைந்தன் – இறைவனால் எமக்கு அனுப்பப்பட்டவன்.'' பியன்வெனு (நல்வரவு) என்று நாமம் சூட்டுவோம்.'' இது தந்தையின் வார்த்தைகள்.

பியன்வெனு – இறைவாக்கு மிகு நாமம்: அவரது குடும்பத்துக்கு, எமது குடும்பத்துக்கு- ஏனெனில் அவர் எமது நிறுவுனர். திருச்சபைக்கு - காரணம் அவர் வணக்கத்துக்குரியவர் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டவர். ஒவ்வொரு பிறப்பும் மகிழ்வுடன் கொண்டாடப்பட்டு, பெற்றோரின் உணர்வுகட்கேற்ப நாமத்தைப்பெறும். ஏன்? பியன் வெனு மட்டும் இதற்கு விதி விலக்கா? அவர் நாமம் ஒரு இறைவாக்குத் தன்மை கொண்டது–இருநூறு ஆண்டை நோக்கிய அவர் பணிகள் திருச்சபைக்கு அவர் ஈந்தவை அனைத்தும் இதற்குச் சான்று பகருகின்றன.

**★ பீற்றர் பியன்வெனு நோஆயின் இளமைப்பருவம்:**

வாழ்க்கை ஒருபயணம். இறைமக்கள் பயணமும் அவ்வாறே. நாமும்-நகரும், பயணம் செய்யும், இடம்பெயரும் அனுபவத்தினூடே செல்லும் பயணிகள். நிச்சயமற்ற நிலைகள், ஏக்கங்கள், விலகல்கள், சோர்வுகள் தடுமாற்றங்கள்; முன்னேற்றங்கள் இவற்றினுடாகப் பயணங்கள் செய்கின்றோம்– பியன்வெனுவின் பயணமும்– அவர் வாரிசுகளாம் நம்மவர் பயணமும் ஒன்றிலொன்று வேறுபட்டதல்ல. ஒன்றுமட்டும் உண்மை. அவர்பயணத்தின் படிக்கல்லாகிய உளமாற்றத்தின் பயணமே இன்று 200 ஆண்டை நாம் நினைக்கும் அளவுக்கு எம்மைக் கவர்வது.

பியன்வெனு ஆற்றல்மிகு இளைஞன்; வழிகாட்டிக்குரிய இயல்புகள் இயற்கையாய் அமைந்தவர்; பேச்சு வன்மையா; எழுத்துத் திறனா; இலக்கிய இரசனையா; நாடகச் சுவையா; பாடலா செய்யுளா; இயற்கையின் இரசனையா; துணிச்சலா வீரமா; எதையும் உற்றுநோக்குக் காரணம் வினாவும் கேள்வி தொடுக்கும் ஆற்றலா; ஏன் அன்பா பாசமா; குடும்பப் பற்றா எதிலும் அவர் ஒரு அசாதாரணமானவர். ஆனால் அன்றுள்ள பிரான்சியப்புரட்சியின் நிலையும், திருச்சபையில் ஏன் சமயத்தில் உண்டான ஆட்டமும் அவரைச்சற்றே விலகத்தான் செய்தது. போர்டோவின் பக்தியுள்ள குடும்பம், தந்தை மதிக்கப்பட்ட நல்ல கத்தோலிக்கர்;- ஆனால் அநுசரணையில் மட்டும் அவர் மைந்தனுக்கு எடுத்துக்காட்டாக இருக்கவில்லை. குடும்பப் பாசம், தாயின் தனிப்பற்று, வேண்டியகல்வி இவற்றுடன் 20 ஆண்டுவரை (1793–1813) வாழ்ந்தார்-உத்தமகத்தோலிக்கனாகவல்ல. அவர் வாழ்வின் உளமாற்றத்தின்முதற்படிக்கல் அவர் திருமுழுக்குப் பெற்ற புனித அந்திரே பேராலயத்தில் இடம்பெற்றது.

(வளரும்)

---

*உன் வாழ்விற்கு வெற்றி தருவது இலட்சியமே!*
*இலக்கற்ற வாழ்வும், குறிக்கோளற்ற பயணமும் ஒன்றே!*
*இறையன்பு, மானிட சேவை, நற்செய்தி மதிப்பீடுகள் அர்ப்பணம் இவையே புனித கிளாரட்டின் இலக்கும், வாழ்வு நெறியும்.*
*இவற்றை கொண்டே அவர் வாழ்வுப் பயணத்தை வென்றார்!*

## நீயும் இலட்சியவாதியா?

இறைவனுக்கும், மனுக்குலத்திற்கும் உன்னை அர்ப்பணிக்க நீ தயாரா?

இளைஞனே, யுவதியே உன் பதில் என்ன?

இலக்கு நோக்கிய உன் பயணத்திற்கு இயக்கம் தர

**கிளரிசியன் சபை** உன்னை அழைக்கிறது.

கிளரிசியன் சபை குருக்களாகவோ, கன்னியராகவோ வர விரும்புகிறவர்கள் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

கல்வித் தகுதி:- G. C. E. O/L, A/L வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**Vocation Director**
CLARETIAN MISSIONARIES
55, Ragama Road
Welisara, Ragama.

A/15

---

# இயேசுவின் 2000 ஆண்டுப் பிறந்தநாள் எப்போ?

★ தமிழ் நேசன்

இயேசுவின் பிறப்பு நிகழ்ச்சியும், இரண்டாயிரம் ஆண்டு நிறைவும் எமது வரலாற்றுநகர்வில் மிக முக்கியமான நிகழ்வுகளாகும். ஆகவே இம்மா பெரிய மகிழ்வின் நிகழ்ச்சியை நாம் உரிய முன் ஆயத்தத்தோடு கொண்டாட வேண்டுமல்லவா?

மானிட வரலாற்றில் இயேசுக் கிறிஸ்துவைப் போன்ற அதி உன்னதமான ஒரு மனிதன் இதுவரை வாழவில்லை. அவருடைய பிறப்பைப் போன்ற ஒரு முக்கிய நிகழ்ச்சி இதுவரை நிகழவில்லை. இயேசுவின் இரண்டாயிரம் ஆண்டுப் பிறந்தநாள் இந்த உண்மையின் வெளிப்பாடாக அமைகிறது. இம்மா பெரிய நிகழ்வைக் கொண்டாட இன்னும் 7 வருடங்கள் இருக்கின்றனவே என்று எம்மில் சிலர் கேள்வி எழுப்பலாம். ஆனால் உண்மை நிலை அப்படியல்ல?

**இயேசு பிறந்தது எந்த ஆண்டு?**

உரோமையர் தங்களின் தலைநகரமான உரோமை நகரம் ஸ்தாபிக்கப்பட்டதில் இருந்தே வருடங்களைக் கணக்கிட்டு வந்தனர். ஏனெனில் உரோமையருக்கு அந்நகரம் ஸ்தாபிக்கப்பட்டது முக்கிய நிகழ்ச்சியாகும். ஆனால் இயேசுக் கிறிஸ்து இம் மண்ணுலகில் மனிதனாகப் பிறந்த நிகழ்ச்சி உலக வரலாற்றிலேயே மிக முக்கியமான நிகழ்ச்சியாகும். எனவே கிறிஸ்து சகாப்தத்தில் கிறிஸ்துவின் பிறப்பை மையமாக வைத்துகணக்கிடும் முறை ஆரம்பமானது.

இம் மாற்றம் உடனடியாக நடமுறைக்கு வரவில்லை. சில ஆண்டுகள் எடுத்தன. காரணம் என்னவென்றால் உரோமையர் கணக்கிடும் முறையைக் கைவிட்டு, புதுமுறையைக் கைக்கொள்ளுவதில் நடைமுறைக் கஷ்டங்களும் எதிர்ப்புகளும் குறுக்கிட்டன. திருச்சபையின் துவக்க காலத்தில் இளந்திருச்சபையானது கலவரங்கள், குழப்பங்கள், வேதகலாபனைகளுக்கு ஆளானது. இதன் மத்தியில் எந்த வருடம் கிறிஸ்து பிறந்த வருடம் எனக் கொள்ளப்பட்டது என்பதையும் எந்த வருடம் உண்மையிலேயே கிறிஸ்து பிறந்த வருடம் என்பதையும் இப்போது ஆராய்வோம்.

**கணிப்புத் தவறு**

கி.பி 540 ஆம் ஆண்டில் மரித்த, சிறிய டென்னிஸ் என்று அழைக்கப்படுகின்ற டயனிசியஸ் எக்சிகூவஸ் (Dionysius Exiguus) என்ற துறவி, இயேசுவின் பிறந்த வருடம் எது என்று ஆராய்ந்தார். இவர் தன்னால் முடிந்தவரை ஆராய்ச்சி செய்து உரோம் நகரம் ஸ்தாபிக்கப்பட்டு 754ஆம் ஆண்டே கிறிஸ்து பிறந்த வருடம் அதாவது கி.பி 1 ஆம் ஆண்டு என்று முடிவுக்கு வந்தார். இக்கணக்கீடு பொதுவாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அவர் நிர்ணயித்த ஆண்டிலிருந்து கி.மு = கிறிஸ்து பிறப்பதற்கு முன்; கி.பி = கிறிஸ்து பிறந்த பின் என்று பிரிக்கப்பட்டு உலக வரலாறு இந்த நாள்வரை கணக்கிடப்பட்டு வருகிறது. இத் துறவி உலகப் பாராட்டுக்குரியவரே. ஆனால் அவர் கி பி 1ஆம்ஆண்டு என்று குறித்த வருடம் உண்மையிலேயே கிறிஸ்து பிறந்த வருடமா? இல்லை. இத் துறவியின் கணிப்புத் தவறானது.

**சரியான ஆண்டு எதுவாக இருக்கலாம்?**

லூக். 2 : 14 இல் சொடுக்கப்பட்டுள்ள பெயர் பதிவு செய்யும் நிகழ்ச்சி உரோம் நகரம் ஸ்தாபிக்கப்பட்டு 746 ஆம் ஆண்டில் நடைபெற்றது. அதாவது டயனீசியஸ் துறவியின் கணிப்பின் படி கி.மு 8 ஆம் ஆண்டில் வருகிறது. அந்தக் கணக்கெடுப்புச் சட்டம் பலஸ்தீனா நாடெங்கும் அமுலுக்கு வர எப்படியும் ஒரு வருடம் ஆகியிருக்கும். எனவே உரோமை நகரம் ஸ்தாபிக்கப்பட்டு 747 ஆம் ஆண்டுக்குப் பிறகு தான் (அதாவது கி. மு 7 ஆம் ஆண்டு) இயேசு பிறந்திருக்க வேண்டும்.

பிறந்தநாள் 1993 க்கும் 1996 க்கும் இடையில் வருகிறது. இயேசு பிறந்த சரியானஆண்டு இதுவரை மனித இனத்திற்கு வெளிப்படவல்லை. இது கடவுளின்திட்டம். சிலவேளை இறையருளால் விஞ்ஞான ஆய்வுகள் மற்றும் அகழ்வாராய்ச்சி மூலம் சரியான திட்டவட்டமான ஆண்டு எது என்று நாம் அறியவரக் கூடும்.

**மாபெரும் நினைவைக் கொண்டாடுவோம்**

சரியான ஆண்டு கணிக்கப்படாத காரணத்திற்காக மாபெரும் மகிழ்ச்சியின் நிகழ்வான யேசுவின் இரண்டாயிரம் ஆண்டுப் பிறந்த நாளை நாம் உரிய முறையில் கொண்டாடாமல் விடுதல் சரியா?

நாம் தமிழ்ப் பண்பாடு, கலாசாரம் என்பவற்றில் ஊறி வளர்ந்தவர்கள். ஆண்டு நிறைவு விழாக்கள், வெள்ளி விழா, பொன் விழா, வைர விழா, நூற்றாண்டு விழாக்களை சிறந்த முன் ஆயத்தம் செய்து கொண்டாடி வருகின்

> ### சிந்தனைக்கு
>
> 1, சோதனைகளை மன உறுதியோடு தாங்குபவன் பேறுபெற்றோன், அதனால் அவன் தகமை எண்பிக்கப்படும்.
>
> 2. இச்சையோ கருவுற்றுப் பாவத்தைப் பெற்றெடுக்கிறது. பாவம் முழு வளர்ச்சியடைந்து சாவை ஈன்றெடுக்கிறது.
>
> 3. நன்மையான எக்கொடையும் நிறைவான எவ்வரமும் விண்ணினின்றே வருகின்றன ஒளியெல்லாம் படைத்த தந்தையே அவற்றிற்குப் பிறப்பிடம்.
>
> 4. இறைவனின் தொண்டனாகத் தன்னைக் கருதும் ஒருவன் நாவடக்க மற்றவனாக இருப்பின் அவன் தொண்டு வீணானதே.
>
> 5. தந்தையாகிய கடவுள் முன்னிலையில் தூய்மையும் மாசற்றதுமான தொண்டு எதுவெனில், வேதனையுறும் அனாதைகள், கைம்பெண்கள் இவர்களை ஆதரிப்பதும், உலகத்தால் மாசுபடாமல் தன்னைக் காத்துக் கொள்வதுமாகும்.
>
> — புனித யாகப்பர்.

பெரிய ஏரோது இறந்தது உரோம் நகரம் ஸ்நாபிக்கப்பட்டு750ஆம் ஆண்டு அதாவது கி.மு 4ஆம் ஆண்டு. மத்தேயு இரண்டாம் அதிகாரத்தில் உள்ளபடிகிறிஸ்து பிறந்தபொழுது ஏரோது உயிரோடு இருக்கிறான். எனவே கிறிஸ்து உரோம் நகரம் ஸ்தாபிக்கட்பட்ட 750 ஆம் ஆண்டுக்கு முன் அதாவது கி பி 4 ஆம் ஆண்டுக்கு முன் பிறந்திருக்க வேண்டும், உண்மையில் உரோம் நகரம் ஸ்தாபிக்கப்பட்ட 747 ஆம் ஆண்டிலிருந்து 750 ஆம் ஆண்டுக்குள், அதாவது கி. மு 7 ஆம் ஆண்டிலிருந்து கி. மு 4 ஆம் ஆண்டுக்குள் கிறிஸ்து பிறந்திருக்க வேண்டும். எனவே கிறிஸ்து உண்மையிலே பிறந்த ஆண்டு கி. மு 7, அல்லது கி. மு 6, அல்லது கி. மு. 5 ஆக இருக்க வேண்டும்.

ஆகவே இதன் படி இயேசுவின் இரண்டாயிரம் ஆண்டுப்

றோம். அப்படியானால் மாபெரும் நிகழ்வாகிய இயேசுவின் இரண்டாயிரம் ஆண்டு நிறைவை தகுந்த முன் ஆயத்தத்தோடு, கருத்துள்ள வகையில் நாம் கொண்டாட வேண்டுமல்லவா?

இத் தமிழ் மண்ணில் கிறிஸ்தவ விசுவாசத்திற்கு சாட்சி பகரும் நாம் அகில உலகத் திருச்சபையோடு இணைந்து இந்த நிகழ்வை உரிய ஆயத்தத்தோடு கொண்டாட அழைக்கப்படுகின்றோம். இவ் வாண்டுக் (1993) கிறிஸ்மஸ் தினத்தில் இருந்து 1996 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தினம் வரை மூன்று ஆண்டுகள் எமக்கு இருக்கின்றன. இந்த மூன்று ஆண்டுக் காலப்பகுதியில் நாம் ஆன்மீகப் புதுப்பித்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகளை திட்டமிட்டு மேற்கொள்ளலாம்.

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

# சாதிக் கொடுமையைப் பற்றி இந்திய கத்தோலிக்க ஆயர்களின் அறிக்கை

*அகில இந்திய கத்தோலிக்க ஆயர்கள் ஜாதிக்கொடுமையைப் பற்றி கண்டனம் எழுப்பி வருவது நாமறிந்த உண்மை. 1965 ஜனவரியில் பெங்களூரில் நடந்த கத்தோலிக்க ஆலோசனை குழுத்தலைவர்களின் கூட்டத்திலும் தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வை மேம்படுத்த, இக்குழு விவாதித்ததை இங்கு தருகிறோம்.*

இந்திய நாட்டு மக்களிடையே சமத்துவமும், சகோதரத்துவமும், சுதந்திரமும், சமவாய்ப்பும், நீதியும், ஜாதிமத பேதமின்றி வழங்கப்பட சட்டத்தில் பாதுகாப்பு இருப்பதும் யாவரும் அறிந்ததே.

இந்திய திருச்சபையானது மேற்கூறிய கோட்பாட்டினை நினைவில் இறுத்தி, தங்களால் இயன்ற வரையில் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பெரும் முயற்சி செய்கிறது.

இவ்வளவு முயற்சிகள் எடுத்தபோதிலும், இன்னும் எவ்வளவோ திருச்சபையிலும், வெளியிலும் ஜாதி மனப்பான்மையை அறவே ஒழிக்க வேண்டியுள்ளது. இத்தகைய கசப்பான உண்மை (ஜாதிப் பற்று) உயர் ஜாதியினர் மத்தியில் மட்டுமல்ல, பிற்பட்ட மக்களுக்குள்ளேயும் உள்ளது.

கிறிஸ்தவ மதக் கோட்பாடுகளின் இத்தகைய இன வேறுபாட்டிற்கு இடமேயில்லை. ஜாதிப்பற்று காண்பிப்பது உண்மையில் கிறிஸ்தவ கோட்பாட்டை புறக்கணிப்பதற்குச் சமம். ஏனெனில் இது மனிதத் தன்மையற்றது. இறைவன் தம் சாயலாக படைக்கப்பட்ட மனிதர்களில் கண்ணியத்தையும், சமத்துவத்தையும் இறைவன் வழங்கியுள்ளார்.

இறைவன் எல்லா மக்களையும் சமமாக ஏற்று அன்பு செய்கிறார். எந்தவித மத வேறுபாடும் காண்பிப்பது கிடையாது. கடவுள் உலகை எவ்வளவு தூரம் நேசித்தாரென்றால் தம் ஒரே பேறான மகனை யேசுக்கிறிஸ்துவை உலகிற்கு அனுப்பினார். அவர் நம் எல்லோரையும் மீட்க மரணமும் எய்தினார். நற்செய்தியைப் புரட்டிப்பார்க்கும் பொழுது எந்த வித சந்தேகத்திற்கும் இடமில்லாமல் மனிதனின் கண்ணியத்தையும், சமத்துவத்தையும் காண்கிறோம். கிறிஸ்து யேசுவில் நீங்கள் எல்லோரும் கடவுளின்பிள்ளைகள், யூதனென்றோ, கிரேக்கனென்றோ, அடிமையென்றோ, உரிமைக் குடிமகன் என்றோ இல்லை. ஏனெனில் நீங்கள் எல்லோரும் கிறிஸ்து யேசுவுக்குள் ஒன்று பட்டவர்கள், கலாத்தியர் 3: 26-28. இப்படியிருக்க ஜாதிமத வேறுபாடு காண்பிப்பது பெரும் பாவமாகும். வெளிப்படையாக இறைவன் நம் அன்புத் தந்தை என்பதைப் புறக்கணிப்பதற்குச் சமம்.

கத்தோலிக்கரிடையே இத்தகைய மனநிலை கூடாது. அர்த்தத்தோடு, பொருள் உணர்ந்து திருவழிபாட்டிலும் பங்கு எடுக்க மக்களிடையே இத்தகைய பேத நிலையை ஒழிக்க கத்தோலிக்கர்கள் முயற்சி செய்தல் வேண்டும். ஜாதியின் அடிப்படையில் பங்கு குழுக்களிலும், நிர்வாகத்திலும் அங்கத்தினர்களை நியமிப்பது சகிக்க முடியாதவொன்று. இன்னும் மிக மோசமானது திருச்சபை நிர்வாகத்தில் ஜாதியின் அடிப்படையில் உயர் பதவிகளை வழங்குவதும், பொறுப்பு வாய்ந்த பதவிகளை துறவறத்தாரிடையே கொடுப்பதும்.

தேசிய ஆலோசனைக் குழு சில பரிந்துரைகளைச் சிபாரிசு செய்துள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களிடையே உள்ள எல்லா வகையான பிரிவினை மனப்பான்மையை ஒழித்தல், சமுதாயத்தில் சகோதரத்துவத்தை ஏற்படுத்தல், கல்விக்கூடங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு முதலிடம் கொடுத்து அவசியம் ஏற்படும் பொழுது தனிப்பட்ட விதத்தில் அவர்களுடைய கல்வியில் அக்கறை காட்டல் போன்றவையாகும்.

தாழ்த்தப்பட்ட மக்களுடைய வாழ்வின் மேம்பாட்டைச் சீர்ப்படுத்துவதற்கு முன்வந்துள்ள பல சேவாசங்கங்களின் திட்டங்களைப் பயன்படுத்தி இவர்களை முன்னேற்ற வேண்டும். எல்லாவித பணிகளிலும், பிற்பட்ட மக்களிடையே உள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி அவர்கள் உள்ளத்தில் சுதந்திர மனப்பான்மையை ஏற்படுத்த விழைதல் வேண்டும், குறிப்பாக பிற்பட்ட மக்களிடையே தேவ அழைத்தலை ஊக்குவிக்க ஆயர்களையும், துறவற சபையின் தலைவர்களையும் ஆயர்குழு கேட்டுக்கொண்டுள்ளது.

இந்திய அரசாங்கமானது பிற்பட்ட மக்களின் விடுதலைக்காக செய்து வரும் எல்லா வகை முயற்சிகளையும் பாராட்டுகிறோம். ஆனால் அதே சமயத்தில் பிற்பட்ட கிறிஸ்தவர்கள் மட்டில் அரசாங்கமானது எந்தவித வேறுபாடும் காட்டாது இருக்கவேண்டும். மற்ற மதத்தைச் சார்ந்த பிற்பட்ட மக்களுக்கு அரசு வழங்கும் சலுகைகளான வேலை வாய்ப்பு, பள்ளியிலும் கல்லூரியிலும் இட ஒதுக்கீடு, பிற்பட்ட

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

# புண்ணிய பூமி நோக்கிப் பயணம்

★ "யோனா"

*கிறிஸ்து பெருமான் பிறந்து வளர்ந்து, வாழ்ந்து போதித்தது பாலஸ்தீனா நாடு. அதைப்பற்றிச் சற்று விரிவான விளக்கத்தை அறிய அப்புண்ணிய பூமி நோக்கிப் பயணம் செய்வோம்!*

பாலஸ்தீனா:

மேற்கு ஆசியப் பகுதியில் உள்ளதுதான் பாலஸ்தீன் நாடு. இந்தியாவின் வடக்கே இமயமலை உள்ளதுபோல், பாலஸ்தீனத்தின் வடக்கே லெபனான் மலைத்தொடர் உள்ளது. தெற்கே இதுமேயா பாலைவனமும், மேற்கே மத்திய தரைக்கடலும், கிழக்கே அரேபியா பாலைவனமும் அரண்களாக அமைந்துள்ளன. இதனால் இயற்கையாகவே பாதுகாப்பான ஒரு சூழ்நிலையைப் பெற்றுள்ளது.

உலகில் எந்தப் பகுதியும் அடையாத பெருமையும் முக்கியத்துவமும் பெற்ற பாலஸ்தீன் நாடு, பரப்பளவில் மிகச் சிறியதுதான். தெற்கு வடக்காக பார்த்தால் அதன் நீளம்— பீர்ஷெபா முதல் 'தான்' வரையும்— 300 கி. மீட்டர் தான் உள்ளது. அதன் தெற்கு பகுதியில் 120 கி. மீட்டரும், வடக்கு பகுதியில் 40 கி. மீட்டரும் அகலப் பரப்பு கொண்டுள்ளது. உலகினை மீட்க வந்த இயேசு, தனது மீட்புப் பணியை ஆரம்பிக்கத் தேர்ந்தெடுத்த நாடு இவ்வளவு சிறிதாக இருக்கிறதே என்று நாம் வியக்கலாம். அதன் தன்மையை அதிகம் அறிய இன்னும் அருகே செல்வோம்.

## இரு பெரும் பகுதி

பாலஸ்தீன் நாட்டை நாம் அடைந்தவுடன், நம் கண்முன் முதலில் தோன்றுவது யோர்தான் நதி. வடக்கிலிருந்து தெற்கே ஓடிவரும் இப் புனித நதி பாலஸ்தீன் நாட்டை இரண்டாகப் பிரிக்கின்றது. ஆதலின் பாலஸ்தீனாவை, யோர்தான் நதிக்குக் கிழக்குப் பகுதியென்றும், மேற்குப் பகுதியென்றும் பிரிக்கலாம். ஆகவே, யோர்தான் நதியை நடுவில் கொண்டு பார்த்தால், பாலஸ்தீன் நாட்டை, மேற்கு பாலஸ்தீன், கிழக்குப் பாலஸ்தீன் என்று அழைப்பது பொருத்தமாகும்.

## மேற்குப் பகுதியில் முக்கிய இடங்கள்

இப்பகுதியை, யூதேயா, சமாரியா, கலிலேயா என்று முப்பெரும் பிரிவுகளாக நாம் காண முடிந்தாலும், குறிப்பிடத்தக்க ஒரு சில இடங்களுக்கு மட்டும் நாம் பயணம் செய்வோம்.

(தொடரும் பயணம் : எருசலேம், பெத்தலகேம்)

## பிறநாட்டுப் பழமொழிகள்

★ உன் உள்ளம் எப்படியோ அப்படியே உலகம்.
— யூகோஸ்லேவியா

★ கதவைத் தட்டாத காரணத்தினால் எத்தனையோ சந்தர்ப்பங்களை இழக்க நேரிடுகின்றது.
— பல்கேரியா

★ எது உன்னிடம் இல்லையோ அதுதான் உனக்கு மிகத் தேவை.
— மலேயா

★ செல்வத்தை விட மேலானது செல்வாக்கு.
— அயர்லாந்து

★ வெள்ளி பேசும்போது முட்டாள் கவனிக்கிறான். தங்கம் பேசும்போது ஞானி காது கொடுக்கிறான்.
— ஜெர்மன்

★ பேசிய வார்த்தை, எய்த அம்பு, சென்றுவிட்ட வாழ்வு, அலட்சியப்படுத்திய சந்தர்ப்பம் இவை திரும்பி வருவதில்லை.
— அரபு

★ உள்ளத்தைக் கடமையில் செலுத்து. சீலத்தைக் கடைப்பிடி. தயைக்குக் கட்டுப்பட்டு மேலான கலைகளில் மனச்சாந்தி பெறு.
— சீனா

# தமிழ்ப் பணி செய்த கிறிஸ்தவம்

● என், மீரா

செந்தமிழ்த் தாய்க்கு அணிகலன்கள் பல சமைத்து அழகு செய்தவர்கள் பற்பலர், பல இனத்தவர், பற்பல சமயத்தவர், பற்பல நாட்டவர்.

உலகளாவிய நிலையிலே இன்று ஏறத்தாள 150 கோடி மக்களுக்கு மேலாக கிறிஸ்தவ சமயத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். அதைப் போலவே மிகுதியாக இன்றும் போற்றப்படுகின்ற ஒரு பழமைவாய்ந்த மொழி என்றால் அது தமிழ் தான். எப்படிக் கிறிஸ்தவ சமயத்திற்கு ஒரு தனிச் சிறப்பு உண்டோ அதைப்போன்று தமிழ் மொழிக்கு ஒரு தனிச் சிறப்பிருக்கின்றது.

கிறிஸ்தவர்கள் தமிழ்த் தாய்க்குச் செய்துள்ள பணிகள் பல தரப்பட்டவை, அவர்கள் தொடாத துறையில்லை. தொட்டதைத் துலங்கச் செய்யாமல் விட்டதில்லை. இவர்களைக் குறிப்பாக வெளிநாட்டவர்கள், தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள், கிறிஸ்தவக் கொள்கைகளைக் கண்டுணர்ந்து பேறுபெற்ற சான்றோர் என்று மூன்று வகைப்படுத்தலாம்.

வெளிநாட்டில் இருந்து வந்த பல்வேறு தமிழ்த் தொண்டர்கள் கடந்த 400 ஆண்டுகளாகப் பணியாற்றியிருக்கிறார்கள். குறிப்பாக இத்தாலி நாட்டிலிருந்து 16ஆம் நூற்றாண்டில் தமிழகத்திற்கு வந்திருந்த தத்துவப் போதகர் றொபெட் டீ நோபிலி தமிழினை உலகத்திற்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார். பழமை வாய்ந்தது என்று தமிழினைப் பற்றிச் சொல்லும்போது, வெளிநாட்டுக் கிறிஸ்தவபோதகர்கள் தமிழருடைய பெருமையை பல மொழிகளிலே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். உலகிற்கு சரியாகப் புரியாமல் இருந்த அல்லது அறிவிக்கப்படாமலிருந்த இந்தத் தமிழ் நெறியை மிகச் சிறப்பாக அவர்கள் பாராட்டி இத்தகைய மொழி தமிழ் நாடுகளிலே சிறப்பாக வளர்ந்திருக்கின்றது என்று சொன்னவர்களாவர். இவர்களில் தலைசிறந்து விளங்குபவர்களில் வீரமாமுனிவர் எனும் யோசப் பெஸ்கி, கால்டு வெல், போப் பையர் சிலராவர்.

தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட கிறிஸ்தவர்கள் என்று சொன்னால் தமிழக அழகாடுதுறை வேதநாயகம், கிருஷ்ணபிள்ளை, தமிழீழ ஞானப்பிரகாசர், தனிநாயகம் அடிகளார் போன்றவர்களை நாம் நினைவுகொள்கின்றோம்.

இந்தத் திருமறையைச் சேராமல் இருந்தாலும் கூட இந்தத் திருமரபுகளில் ஈடுபாடு கொண்டவர்களாக சுத்தானந்தபாரதியார், தமிழ்த் தொண்டர் கலியாண சுந்தரனார், கவியரசு கண்ணதாசன் போன்றவர்கள் கிறிஸ்தவ சமயத்தில் ஈடுபாடு கொண்டு மிக அருமையாகத் தொண்டு செய்திருக்கிறார்கள்.

இன்று மட்டும் கிறிஸ்தவம் தமிழுக்கு ஆற்றியிருக்கின்ற தொண்டுகளையெல்லாம் சொல்லுவதாகவிருந்தால் அதனை ஒரு துறையிலன்றி பல்வேறு துறைகளிலே தமிழ் மரபாகக் கச்சேரியிட்டுக் கூடக் காட்டலாம்.

புராணங்களில், திருவாக்குப் புராணம், சுவிசேஷ புராணம், யோசேப் புராணம் சிறந்தவை.

பெருங்காப்பியங்களில் தேம்பாவணி, இரட்சணிய, யாத்திரிகம், ஞானாதிக்கர் காப்பியம் முன்னிற்பவை.

சிற்றிலக்கியங்களில் திருக்காவலூர் கலம்பகம், எண்டூர்க் கலம்பகம், நகரைக்கலம்பகம், பெத்லகேம் குறவஞ்சி, நகுலமலைக் குறவஞ்சி, ஞானப் பள்ளு, யேசுநாதர் பிள்ளைத் தமிழ், வானவன்விடுதூது, காவலன் விடுதூது, அன்னையமுங்கல் அந்தாதி, வேதபுரி அந்தாதி, மருதடி யந்தாதி, காவலன் ஆகம வெண்பா, கித்தேரியம்மாள் அம்மானை' மறுகிருதாள் அம்மானை, தேவமாதா அம்மானை, சந்தியோகு அம்மானை, கபாலமலைப் பரணி முதலியன சுவையிலும் நயத்திலும் சிறப்பன.

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

# தொலைநோக்கு என்றால் என்ன?

சிறுகதை

ஒரு சிறிய வயலைச்சொந்த மாகக் கொண்டிருந்த சந்நியா சிகள் சிலர் ஒரு ஆச்சிரமத்தில் வாழ்ந்து வந்தார்கள். இன்ப துன்பமற்ற ஒரு வாழ்க்கையாக அது அமைந்திருந்தது. சுருங் கச் சொல்லின் அர்த்தமற்ற ஒரு வாழ்க்கையை நடத்தினர். வேறு எந்தவித வாழ்க்கையும் அவர்களுக்கு அறிமுகம் இல் லாததனால் இப்படி வாழ்ந்து வந்தார்கள். அவர்களோடு இணைந்து கொள்ளுவதற்காக இளமைத் துடிப்பும் உற்சாக மும் உள்ள வாலிபன் ஒருவன் ஒருநாள் அங்கு வந்தான். அவர்களுடைய சபையில் சேர விரும்பினான். அவன் ஒரு சிறந்த எழுத்தாளனாகவும், சங்கீத பூஷணியாகவும் ஓவியக் கலை, மற்றும் விஞ்ஞானம் போன்றவற்றிலும் திறமை சாலியாக இருந்தான். இத்த கைய இளைஞன் ஒருவன் தம் முடைய சபையிலே சேர வந்தி ருப்பது தங்களுக்குக் கிடைத்த பெரும் அதிஷ்டம் என்று அந்த மடாதிபதி கருதினார்.

அவனது சந்நியாச பயிற்சிக் காலம் முடிந்துகொண்டிருந்த காலத்தில் எழுத்துவினைஞன் ஆவதற்கு எனது படிப்பைத் தொடரலாமா என்று மடாதி பதியைக்கேட்டான். ''இல்லை. இங்கே எவரும் எழுத்தாளர் கள் ஆவதில்லை. ஆனால் இங்கு கவனமாக எமது வய லைப் பராமரிப்பதுதான் எமக் குரிய சிறப்பானவேலை'' என்று கூற, இளைஞன் ''சரி'' என்று கூறி வயலில் போய் வேலை செய்தான்.

சில காலம் கழிந்தபின் மீண் டும் மடாதிபதியிடம் சென்று ''சங்கீதம், ஓவியம்ஆகிய கலை களில் நான்பயிற்சிபெறலாமா'' என்று கேட்டான் இளைஞன். ''இல்லை,இங்கே எமக்கு இவை பிரயோசனப்படாது, வயலைப் பராமரிப்பதுதான் எமது முயற் சியாக இருக்கிறது,'' என, ''அப் படியா'' என்றுகூறிவிட்டு மீண் டும் மடாதிபதியிடம் வந்து, ''நான் எனது விஞ்ஞானம், தொழில் நுட்பக் கலைகளில் படிப்பைத் தொடர முடியுமா'' என்று கேட்டான். ''உனக்கு விளங்கவில்லையா? நாம் இங்கு இருப்பது இந்தச் சிறிய வய லைச் செய்கைபண்ணுவதற்கா கவே. அதைச் செய்வதில் மட் டும் நிலையாயிரும். வேறு ஒன்றுமில்லை,'' என, ''அப்ப டியா?'' என்று கூறி மீண்டும் வயலில் போய்த் தன் வேலை யைத் தொடர்ந்தான். அப் பொழுது ஒரு பழைய பெட்டி ஒன்று வயலுக்குள் ஆழமாகப் புதைக்கப்பட்டிருப்பதைக் கண் டான். பெட்டியைத் திறந்து பார்த்தபொழுது, அங்கே சந் நியாசிகள் தமது தோட்டத் தில் விளையாடி, வேலை செய்து, கட்டடம் நிறுவி, முக மலர்ச்சியோடு படித்துப் பாடி செபித்து, மகிழ்ந்துகொண்டி ருக்கும் ஒரு அழகிய படத் தைக் கண்டான். இந்தத் தொழிற்பாடுகளின் மத்தியில் நிறுவனத்தின் தலைவர் தோற் றமுடைய ஒருவர் நடுநிலை வகிப்பதையும்கண்டான். 'நான் சேரவேண்டிய, சேர விரும்பிய ஆச்சிரமம் இதுதான்.' என்று தன்னில் உறுதிபூண்டான் ''கடவுள் எனக்கென்று தெரிந்த ஆச்சிரமத்தை நான் கண்டு கொண்டேன். ஆகவே நான் இந்த நிலையத்தை விட்டு உடனேவெளியேறவேண்டும்.'' என்று மடாதிபதியிடம் கூறி னான். ''அந்த ஆச்சிரமம் எது?'' என்று மடாதிபதி கேட்டார். தான் கையில் வைத்திருந்த ஓவியத்தை அவ ரிடம் கொடுத்து ''இதுதான் அது'' என்றான். ''நான் எமது சிறுவயலில் நிலத்தை வெட்டிக் கொண்டிருந்தபோது இந்தப் படத்தைக் கண்டெடுத்தேன். நீர் இதைவைத்துக்கொள்ளும். நான் போய்வருகிறேன்'' எனக் கூறி வெளியேறினான். மடாதி பதி தனது ஆசனத்தில்சாய்ந்த வண்ணம் தமது சபை நிறுவ னரைப் படத்தில் பார்த்து, அவரை அன்புடன் நினைவு கூர்ந்து கண்ணீர் சொரிந்தார்.

# காவலன் கண்மணிகள்

| ஒளி: 7<br>சுடர்: 13 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |
|---|---|

## அம்மா

7 (1) ஈழத்தாயின் இதயத்தில் அம்மாவின் சில நினைவுகள் :

போத்துக்கேயர் காலத்தில் கிறிஸ்தவம் இம்மண்ணில் ஊன்றிய நாளில் தேவதாயின் பக்தி வித்திடப்பட்டது.

1622 செப்ரம்பர் 8 இல் திருச்சபையும் அரசாங்கமும் யாழ்ப்பாண இராச்சியத்தை தேவமாதாவுக்குப் பரிகாரமாக அர்ப்பணம் செய்யப்பட்டதாக வரலாறு கூறுகிறது.

1687 இல் யோசவாஸ் முனிந்திரரும் அவர் பின்வந்தோ ரின் சேவையும் தேவனின் தாய் மரியாளின் பக்தியை இவ்வழ கிய தீவில் வளர்க்க உதவிற்று.

கத்தோலிக்க மக்கள் துன்புறுத்தப்பட்ட காலங்களில், ஒளிந்து மறைந்த மக்களைத்தேடி சேவை செய்த முனிந்திரரை செபமாலை இனங்காட்டியது.

ஒரட்டோறியன் குருக்கள் தேவதாயின் மேல் பக்தியை யும், விசேடமாக செபமாலைப் பக்தியையும் மக்கள் மத்தியில் வளர்த்தனர்.

யாக்கோமே கொண்ஸ்சால்லேஸ் அடிகளார் இத்தீவிற்கு வந்த சில மாதங்களுக்குள்ளேயே முதலில் தமிழிலும் பின் சிங்களத்திலும் மறை உண்மைகளை எழுதினார்.

1727ஆம் ஆண்டு புத்தளத்தில் அமல உற்பவியின் திரு விழா அவள் கோயிலில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அவ்வேளை வரட்சியால் வாடிநின்ற நாட்டுற்கு மழைவேண்டி மக்கள் செபித்தனர். தேவதாயின் சுருபச் சுற்றுப்பிரகாரம் முடியும் முன்பே மழை பெய்யத் தொடங்கியது. தேவதாயின் அற்புத சக்தி நாடெங்கும் பரவியது, மாதாவின் பெயரால் பல பக்திச் சபைகள் பறப்பாங்கண்டல், கொழும்பு போன்ற இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டன.

உங்கள் அன்பின், அன்பு விழி

### அங்கத்துவம்

| | | | | |
|---|---|---|---|---|
| 308 | நீ. நிக்ஸ் மாலா | ஆண்டு | 6 | யாழ். கன்னியர் ம. ம. வி. |
| 309 | அ. மரியகொறற்றி | ,, | 3 | ,, ,, |
| 310 | இ. தர்மிக்கா | ,, | 5 | யாழ். திருக்குடும்ப க. ம. |
| 311 | யா. மரிஸ்ரெலா | ,, | 11 | றோ. க. தமிழ் கலவன் பாடசாலை, கிளாலி. |

# தமிழ்ப்பணி செய்த கிறிஸ்....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாடகங்களில் ஸ்ரீ உப கார்த்த விலாசம், மூவிராசர் வாசகப்பா, எஸ்தாக்கியார் நாடகம், ஞானதச்சன் நாட கம், ஏரோது நாடகம், தேவ சகாயம்பிள்ளை வாசகப்பா, போன்றவை முன்னணியில் நிற்பவை.

இரட்சணிய மனோகரம், கர்த்தர் சொன்ன கீர்த்தனை, கிறிஸ்துசமய கீர்த்தனை, ஞான கீர்த்தனங்கள், யாத் திரை கீர்த்தனை, சர்வசமய கீர்த்தனை, கருணாம்பர பதி கம் முதலியவை இசை நூல் களில் சிறந்தவை.

இப்படிப்பட்ட பல்வேறு துறைகளில் ஏறத்தாள ஐம் பதிற்கு மேற்பட்ட நூல்களைத் தமிழில் தந்திருக்கிறார்கள் கிறிஸ்தவப் பெரியார்கள்.

குறிப்பாக மறுமலர்ச்சி உரிமையை உருவாக்கியவர்கள் கிறிஸ்தவர்கள்தான். அதைப் போலவே அகராதி வடிவில் அமைத்துக் கொடுத்தவர்கள் கிறிஸ்தவர்கள்தான். எழுத்துச் சீர்திருத்தம் வாயிலாக தமிழ் வடிவத்தை எழுதிக் கொடுத் தவர்கள் கிறிஸ்தவர்கள்தான். இலக்கணப் பெரியவர்கள், தமிழ் உண்மைகளைப் புலப் படுத்தியவர்கள் கிறிஸ்தவர் கள் தான்.

உரைநடையின் வளர்ப்புத் தந்தை எனப் போற்றப்படு பவர் தத்துவ போதகராவர். வீரமாமுனிவர் குறுங்கதையின் வளர்ப்புத் தந்தை. வேத நாயகர் புதினத்தின் தந்தை. ஒப்பிலக்கணத்தின் தந்தை கால்டுவெல். முதல் மொழி பெயர்ப்பாளர் வீரமாமுனிவர். போப்பையர் அகராதியின் தந்தை. இவை போன்று அடுக்கிக் கொண்டே போக லாம்.

தமிழின் பெருமையை உல கறியப் பறைசாற்றிய பெருமைக்குரியவர்கள் கிறிஸ்த வர்களே என்று ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள் மிகத் தெளி வாக எடுத்துக்காட்டியிருக்கி றார்கள். தமிழரின் அறிவுக் களஞ்சியமெனும் திருக்குறளை மொழிபெயர்த்து உலகத்திற்கு அறிமுகப்படுத்தியவர்களில் முதலிடம் வகிப்பவர் இத்தாலி நாட்டு வித்தகர் வீரமா முனிவர். வட மொழிகளைத் திருத்தித் தந்து தமிழ் மொழி யின் தன்னிகரில்லாச் சிறப்பை உலகத்திற்கு அறிமுகப் படுத்தி யவர் றொபெட் கால்டுவெல் எனும் அயர்லாந்துநாட்டவரா வர். அதைப் போலவே தமி ழின் தொன்மை மரபை உல கத்திற்கு உணர்த்தியவர்கள் யாழ்ப்பாணத்து நல்லூர் ஞானப்பிரகாசர், தாவீது அடி கள் போன்றவர்கள். உலகத் தமிழாராட்சி மாநாட்டுக் கருத் தரங்குகள் நடைபெறத் திட்ட மிட்டுச் செயலாற்றியவர்கள் தனிநாயகம் போன்ற பெரியார் கள். தமிழருடையபெருமையை குறிப்பாக தொழிலாளியைத் தலைவனாக்கி இலக்கிய மொன்றை முதலிலே வகுத்துத் தந்தவர் வீரமாமுனிவர். இரட் சணிய யாத்திரிகம் தந்தவர் கிருஷ்ணபிள்ளை ஆவர்.

தற்காலத்தில் சிறப்பாக சென்னைப் பல்கலைக் கழகத் தில் கிறிஸ்துவ இலக்கியத்துக் காக ஒரு தனித் துறையே இயங்கி வருகின்றது. தலைவர் ஏகாசி அவர்கள் அந்தப் பணி யினை மேற் கொண்டு வருகி றார்கள். அதைப் போலவே மதுரைக் காமராஜ் பல்கலைக் கழகத்தில் தந்தை ஞானப்பிர காசம் அடிகளார் கிறிஸ்துவ இலக்கியத்துறையின் வாயி லாக ஆய்வுகளை வளர்த்து வருகிறார்கள். அதைப் போலவே தமிழ்ப் பல்கலைக் கழகத்திலே தஞ்சாவூரிலிருந்து காஞ்சிப்புரத்தை மையமாகக் கொண்டிருக்கின்ற அந்தத் தத்துவப்பீடத்தில் தந்தை ராஜமாணிக்கம் அடிகளார் இந்தக் கிறிஸ்துவ ஆய்வுகளுக் காக தன்னையே ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றார். நமது தமிழீழத்தின் யாழ். பல்கலைக் கழகத்தின் கிறிஸ்துவ இஸ்லா மியத் துறையின் தலைவர் சந் திரகாந்தன் அடிகளார், யாழ். திருமறைக் கலாமன்ற இயக்கு நர் மரிய சேவியர் அடிகளார் தமிழ் கலாச்சார வளர்ச்சிக்கு அமைதியாக, அழுத்தமாக ஆற்றும் அரும்பணி போற்றிப் புகழத்தக்கனவாக அமைந்து இருக்கின்றன.

இன்றைக்கு கிறிஸ்தவர்கள் தங்கள் முத்திரையை பல துறைகளிலும் பதித்திருக் கிறார்கள். கிறிஸ்துவத்தை வளர்ப்பதில் மட்டும் குறிக் கோள் என்று எவரும் கொள்ள வில்லை. தமிழை வளர்க்க வேண்டும் என்றும் வாழ்ந்தார் கள். அதே வேளையில் கிறிஸ் தவமும் வளர்ந்தது.

''நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக் கும் ஆங்கே பொசியுமாம்''. இதைப் போலவே ஒரு பணி செய்கின்ற போது இன்னொரு பணியும் அதில் இணைகின்றது. கிறிஸ்துவ பெரியார் அதை வேறுபடுத்திப் பார்க்க வில்லை. பிரித்துப் பார்க்க வில்லை. அப்படிப் பாரதிப் புலவரைப் பற்றிச் சொல்லு கின்ற போது அவர்கள் மிகச் சிறப்பாகச் சொல்கிறார்கள். தமிழாலே பாரதி வளர்ந்தார். பாரதியாலே தமிழ் வளர்ந்தது. இப்படிக் கிறிஸ்தவமும், தமி ழும் பின்னிப்பிணைந்து இரண் டுமே வளர்ந்து நிற்கின்றது.

## சாதிக் கொடு...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறிஸ்தவ மக்களுக்கு அரசு தருவதில் வேறுபாடு காண்பிக் கும் நிலைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கவேண்டும்.

இத்தகைய ஜாதிப் பிரி வினையும். அதன் தீய விளை வுகளும் திருச்சபைக்கு மட்டும் ஏதோ ஒரு மேல்வாரியான பிரச்சினை என்றல்ல, சமுதா யத்திற்கே உரிய ஒரு பிரச் சினை. இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண காலம் தாமதித்தல் அல்லது பிரச்சினையே அணு காது இருத்தல், மனிதனுடைய அடிப்படை உரிமைகளுக்கு ஒரு வினாக்குறி போலாகும். கிறிஸ்துவ அழைத்தலையே புறக்கணித்தல்போன்றதாகும். இலட்சக்கணக்கான சகோதர சகோதரிகள் உரிமைகள் மறுக் கப்படும் நிலையில் காலம் தாழ்த்தாது இந்த பிரச் சினைக்கு முடிவு காணவேண் டும். (நன்றி:- சர்வவியாபி)

## 31ஆம் நாள் நினைவு



திரு. பாக்கியநாதர் யோசேப் (செல்வராசா)

பிறப்பு: 16-08-1924 இறப்பு: 01-06-1993

''உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்ப வன் ஒரு போதும் சாகான்''
(அரு. 11 : 25.)

ஓ! மிகவும் இரக்கமுள்ள யேசுவே! திருச்சிலுவையில் தேவரீர் சிந்திய விலைமதியாத திரு இரத்தத்தின் பேறுபலன்க ளைப் பார்த்து உமது திருவடி நிழலை அடைந்த பாக்கிய நாதர் யோசேப்புவின் ஆத்துமத் திற்கு நித்திய பேரின்ப இளைப் பாற்றியையும் முடிவில்லா பிரகாசமும் தந்தருளும்சுவாமி!

பிரிவால் துயருறும்.
மனைவி, மக்கள், மருமகள், பேரன், உறவினர்.
44, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். A/19/93

# செய்திச் சாறு

★ குடும்பத்திற்கான திருப்பீட அவை மற்றும் பிலிப்பைன்ஸ் ஆயர்கள் பேரவையின் முடிவுடன் நடத்தப்படும் சர்வதேச குழந்தை விவகாரம் பற்றிய கூட்டம் ஜுலை 1ம் திகதி மணிலாவில் தொடங்கியது.

★ ஈராக்கிற்குத் தேவையான மனிதாபிமான உதவிகளை அனுப்புவது குறித்த வழிகளைச் சிந்தித்து வரும் கத்தோலிக்க நிறுவனங்களின் முன் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்த குரு கோர்க்கோடாக் மேலும் தெளிவான உண்மை நிலைகளை முன் வைக்கும் நோக்கில் ஈராக்கிற்கு பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

★ மரியாள் குருக்கள் கழகம் ரோமில் நடாத்திய சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்ட ஏறத்தாழ 350 குருக்களை வெள்ளியன்று சந்தித்து உரையாற்றிய பாப்பிறை புதிய நற்செய்தியின் மையம் கிறிஸ்துவின் சிலுவை என்றார்.

☆ போலந்து நாட்டில் வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் ஒவ்வொரு குடிமகனும் தனக்குள்ள வாக்குரிமையைச் செயற்படுத்த வேண்டுமென்று அந்நாட்டு ஆயர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

பேராயர் ஒஸ்கோ ரொமேரோவை

## முத்திப்பேறுபெற்ற நிலைக்கு உயர்த்த முயற்சி

எல்சல்வடோர் நாட்டில் 1980 ஆம் ஆண்டு வலதுசாரி மரணப்படையால் கொல்லப்பட்ட பேராயர் ஒஸ்கோ ரொமேரோவை முக்திபேறு பெற்ற நிலைக்கு உயர்த்துவதற்கான வழி முறைகளைத் தொடங்குவதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென்று அந்நாட்டு ஆயர்கள் திருப்பீடத்தைக் கேட்டுள்ளனர். இது குறித்து புனிதர் நிலைக்கு உயர்த்துவதற்கான திருப்பீடப் பேராயத்தின் தலைவர் கருதினால் ஆஞ்சலோவிற்கு எல்சல்வடோர் ஆயர்கள் கடந்த வாரத்தில் விண்ணப்ப மடலை அனுப்பியுள்ளார்கள் என்று செய்தி நிறுவனம் அறிவித்தது.

1980 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதி யன்று மருத்துவமனையில் ஆலயமொன்றில் திருப்பலி நிகழ்த்திக் கொண்டிருந்த போது சுட்டுக் கொல்லப்பட்ட பேராயர் ரொமேரோ அந்நாட்டின் உள்நாட்டுப்போரில்இடம்பெற்றுவந்த மனித உரிமைகள் மீறல்களைப் பொதுப்படையாய் கண்டித்துப் பேசினார். இம் மீறல்களையிட்டு இராணுவ அரசையும் சில குழுக்களையும் குறை சொல்லிவந்தார் எல்சல்வடோர் பேராயர். 12 வருட உள்நாட்டுப்போரில் ஏறத்தாள 75 ஆயிரம்பேர் உயிரிழந்தனர்.

### குருத்துவ நிறைவு தினம்

### "செபிப்போமாக"

| | | | |
|---|---|---|---|
| யூலை | 24 | அல்பன் ராஜசிங்கம் o.m.i. | 1974 |
| | 27 | A. ஜீவேந்திரா போல் o.m.i. | 1982 |
| | 28 | M. N. V. அமிர்தகுமார் | 1983 |
| | | S. F. கிருபானந்தன் | 1983 |
| | | மைக்கல் T. பற்றிக் | 1983 |
| | 28 | S. J. Q. ஜெயறஞ்சன் | 1992 |
| | | K. யேம்ஸ் சிங்கராயர் | 1992 |
| | | A. F. லொசிங்ரன் o.m.i. | 1992 |
| | | G. அற்புதராஜா o.m.i- | 1992 |
| | | S.எட்வின் வசந்தராஜா o.m.i. | 1992 |
| | | A. இம்மானுவேல் o.m.i. | 1992 |
| | 29 | M. சூசைப்பிள்ளை | 1980 |
| | 30 | A. ராயப்பு | 1985 |
| | | S. A. ஜோர்ஜ் | 1991 |
| | | M. யேசுரட்ணம் | 1991 |
| | | J. J. மவுலிஸ் | 1991 |
| | | G. பீற்றர் | 1991 |
| | | A. J. யாவிஸ் | 1991 |
| | 31 | G. V. பிலேந்திரன் | 1980 |
| | | சாள்ஸ் கொலின் | 1990 |
| | | S. N. C. ஞானராஜா | 1990 |

## தனது உயிரை துச்சமாக மதித்த வீரன்

*M E. பயஸ் அடிகளாரின் சேவை நலம் பாராட்டு விழாவில் திரு. ஞா. அருளானந்தம் ஆற்றிய உரை.*

''பயன் நோக்கான் செய்யும் உதவி அதன் நயன் நோக்கின் பெரிது, பெரிது கடலிலும் பெரிது'' என்ற முதுமொழிக்கு அமைய எமது இயக்குனர் தந்தை அருட்திரு M. E. பயஸ் அடிகளார் எந்த ஒரு கைமாறையும் யாரிடத்திலும் எதிர் நோக்காத வகையில் இன, மத, பேதம் இன்றி எல்லா மக்களையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்த்து தேவையான உதவிகளை சம்பந்தப்பட்டவர்களுக்கு தேவையான சமயங்களில் உதவியுள்ளார். விசேடமாக சம காலத்தில் மக்கள் குண்டு வீச்சினாலும், இராணுவ ஆக்கிரமிப்பினாலும் காலம் காலமாக வசித்து வந்த இல்லங்களை, தேடிய சொத்துக்களை, உற்றார், உறவினர்களையும் இழந்து அகதிகளாக்கப்பட்டு மிகவும் கஷ்டமான வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களுக்கு தேவையான உலர் உணவு, உடைகள், இருப்பிட வசதிகள் போன்றவற்றைச் செய்து கொடுத்துள்ளார். அநேகமாக முகாங்களில் இல்லாத மக்கள் பலர் தேவாலயங்களிலும், ஆலயச் சுற்றாடல்களிலும் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு மக்கள் முன்னேற்ற நடுநிலையத்தின் ஊடாக இவரது உதவிகள் பெரும் ஆறுதலைக் கொடுத்துள்ளன. பங்கு ரீதியாக பார்க்கும் இடத்து அக்குடும்பங்களின் விபரம் வருமாறு :

தாளையடி 2701, முகமாலை 332, சாவகச்சேரி 786, சங்கானை 986, பருத்தித்துறை 686, கரவெட்டி, 336, அச்சுவேலி 385, மானிப்பாய் 377, கோப்பாய் 326, நவாலி 114, இவற்றைவிட அனாதை இல்லங்கள் இவரது செயற்பாட்டின் மற்றுமோர் வடிவம். அவை வருமாறு :

மிருசுவில் 53, உருத்திரபுரம் 81, உடுவில் 38, அரியாலை (அன்பகம்) 48, முல்லைத்தீவு 19. மேலும் 75 பிள்ளைகளைக் கொண்ட இரவு நேர வகுப்புகளும் இவரது முயற்சியால் நடைபெறுகின்றன. வடபகுதியில் உணவுத் தட்டுப்பாடு நிகழ்ந்தபோதெல்லாம் இவர் பயங்கரமான சூழ்நிலையையும் பொருட்படுத்தாது தனது உயிரையும் துச்சமாக மதித்து கிளாலி கடலூடாக கொழும்பு சென்று மேலதிகாரிகளோடு வாதாடி உணவுப் பொருட்களை இங்கு தருவித்தமை மிகவும் பாராட்டத்தக்க ஒன்று. கிளிநொச்சி, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, வலப்பாடு பகுதியில் வாழும் மக்களுக்கு வீடுகளும், விவசாயத் தேவைகளுக்குக் கிணறுகளும், கல்விக்காகப் பாடசாலைகளும் மாத்திரமல்லாமல் விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும், சிறு கைத்தொழில்களுக்கு தேவையான பணம் கடன் அடிப்படையில் பெறுவதற்கு வசதிகள் செய்து கொடுத்துள்ளார். தையல் நிலையங்கள், தட்டச்சுப் பயிலகங்கள், தும்புத்தொழில் போன்றவை இவரது செயற்பாடுகளில் போற்றத்தக்கவை.

இவைகள் யாவும் மக்கள் உயிரோடு ஒற்றுமையாகவும், புரிந்துணர்வோடும் வாழ வகை செய்யும் உதவிகள். ஆனால் இனிமேல் அவர் தொடரப் போகும் பணி மக்களை ஆன்மீக வழியில் நடாத்திச் செல்லும் மேய்ப்புப்பணி. எனவே அவரை மனமாற வாழ்த்தி விடைபயில்வோமாக!

### 31 ஆம் நாள் நினைவு



பேதுறுப்பிள்ளை
கபிரியேல்பிள்ளை
(செல்வரெட்ணம்)

மலர்வு 02-02-1936 உதிர்வு 14-06-1993

அன்பிற்கும் பண்பிற்கும் இருப்பிடமாய் எம்முடன் வாழ்ந்து பார் புகழும் கடற்படை வீரனாய், விளையாட்டு வீரனாய், பல்கலை போதனாசிரியனாய் வாழ்க்கையில் எம்மை எல்லாம் ஏங்க விட்டு இறையடி சேர்ந்த எம் தலைவா! உம் ஆன்மா வான் வீட்டில் பிரகாசிக்க நித்தியராகிய யேசுவை மன்றாடுகிறோம்.

இவரின் ஆன்ம சாந்திக்காக 14 – 07 – 93 புதன் கிழமை காலை 6. 15மணிக்கு நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் பங்குபற்றி அவர் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடுமாறு வேண்டுகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், சகோதரி,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மைத்துனர்கள், மைத்துனி,
உற்றார் உறவினர்.

23, நாவாந்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## இயேசுவின்...

(3ஆம் பக்கத்தொடர்ச்சி)

நாம் பேறுபெற்றவர்கள்!

இரண்டாயிரத்தி முப்பதாம் (2030) ஆம் ஆண்டளவில் அன்னை திருச்சபையானவள், இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பின் இரண்டாயிரம் ஆண்டு நிறைவையும், திருச்சபை பிறப்பு இரண்டாயிரம் ஆண்டு நிறைவையும் மகிழ்வோடுகொண்டாடுவாள். இன்றைய இளம் சந்ததியினரில் பலர் இம் மாபெரிய நிகழ்வுகளைக் கண்டு களிக்க உயிரோடு இருப்பர், நமக்கு முன் வாழ்ந்த எத்தனையோ சந்ததிக்கும் கிடைக்காத அரிய சந்தர்ப்பம் எமக்கும் எம் இளம் சந்ததிக்கும் கிடைத்துள்ளது. நாம் பேறுபெற்றவர்கள் தானே...! எனவே இம் மாபெரிய நிகழ்வின் முக்கியத்துவத்தை உணர்வோம். எமக்கு கிடைத்துள்ள அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவோம், உரிய ஆயத்தங்களை மேற்கொள்வோம்.

● தமிழ்நேசன்

## பங்குக் குரவர்கட்கு ஓர் அறிவித்தல்

கிறிஸ்தவ சகாப்தத்தின் 3வது ஆயிரம் ஆண்டுக்காக பரிசுத்த தந்தை 2ஆம் அருள்சின்னப்பர் இயற்றிய செபம், அழகிய அன்னை மரி அட்டைப் படத்துடன் அச்சிடப்பட்டு யாழ் மறைக் கல்வி நிலையத்தில் விற்பனைக்கு (ரூபா 2-00 மாத்திரம்) இருக்கிறதென்பதை அறியத் தருகிறோம்.

## சிரமங்கள் மத்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய வசதிகளோ இருக்கவில்லை. ஆனால்எனது நம்பிக்கை வீணாகவில்லை, எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியில் தனக்கு அளிக்கப்பட்ட பணியை திறம்படச் செய்துள்ளார். இன்றும் மாற்றலாகிச் செல்லும் இடத்திலும் ஒழுங்கான கட்டிடங்களோ அடிப்படை வசதிகளோ இல்லை. ஆனால், இவர் அங்கு சென்று மனித முன்னேற்ற நிலையத்தில் பணியாற்றியது போல் திறம்பட செயலாற்றுவார்'' என்றார்.

ஆயர் தோமஸ் ஆண்டகை அவர்கள் தமது உரையில், ''பயஸ் சுவாமி எடுக்க வேண்டியதெல்லாம் எடுக்க வேண்டிய இடங்களிலிருந்து எப்படியாவது எடுத்து வந்து கொடுக்க வேண்டிய இடங்களுக்கு கொடுப்பதில் திறமையானவர். எவ்வளவோ சிரமங்கள் மத்தியில் விமான குண்டு வீச்சின் மத்தியில், செல் தாக்குதல்களுக்கூடாக செஞ்சிலுவை சங்க கொடியை பிடித்துக் கொண்டு தனது உயிரை மதியாது நிவாரணப் பொருட்களை இங்கு கொண்டு வந்தது அவரது சேவை மனப்பான்மையை வெளிப்படுத்துகின்றது'' என்றார்.

திரு. வோல்ரர் பணியாளர் சார்பில் உரையாற்றும் போது பயஸ் சுவாமி அவர்கள் ஒரு வேலை வாங்குபவராக அல்ல, தந்தையாக, தனயனாக எமது துயர்களை உணர்ந்து குற்றங்களை மன்னித்து எம்மை வழி நடத்தினார் என்றார்.

புதிய இயக்குநராக நியமனம் பெற்றுள்ள அருட்திரு S. H. ஜெபநேசன் அடிகளார் விழாநாயகனின் சேவைகளைப் பாராட்டி அவருக்கு நன்றி தெரிவித்து, உண்ணாவிரதமிருக்கும் யுத்தக் கைதிகளின் விடுதலைக்காக ஆக்கபூர்வமான ஒழுங்குகளை அரசு மேற்கொள்ள இறைவனை இறைஞ்சுமாறு கேட்டுக் கொண்டார்.

செல்வி ம. பத்மா சமூகமளித்த அனைவருக்கும் நன்றி கூறினார். இறைவனுக்கு நன்றி கூறும் கீதத்துடன் மாலை 5-15 மணிக்கு விழா நிறைவு அடைந்தது.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில், 1993 ஆம் ஆண்டு யூலை மாதம் 02ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. இல. QB/1001/58/81